Tamil/Tamoul

# ஊசி போடும் முறை

Pr **Fragmin®**
dalteparin sodium

**முன்நிரப்பப்பட்ட பாதுகாப்பான சிரிஞ்சைக் கொண்டு உங்களுக்கு நீங்களே ஃப்ராஃக்மின் ஊசி போட்டுக்கொள்வது எப்படி?**

**ப்ளிஸ்டர் பாக்கேஜிலிருந்து சிரிஞ்சைக் கைகளால் எடுக்க முயற்சி செய்யாதீர்கள்.**
கீழே 1 முதல் 3 வரை தரப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி இதனைச் சரியாகக் கையாளுங்கள். இல்லாவிட்டால், ஊசியின் பாதுகாப்பு வசதி செயல்பட்டுவிடக்கூடும். அதன்பிறகு சிரிஞ்ச் பயன்படாது.

## வழிமுறை 1

ப்ளிஸ்டர் பேக்கேஜின் பின் பகுதிக் காகிதத்தை முழுவதுமாக உரித்து எடுங்கள்.



## வழிமுறை 2

பேக்கேஜைத் திருப்பி, திறந்துள்ள பக்கம் கீழே பார்க்கும்படி செய்யுங்கள். அது மேஜை போன்ற சமதளப் பரப்பிலிருந்து மூன்று முதல் ஐந்து செண்டிமீட்டர் உயரத்தில் இருக்கவேண்டும்.



## வழிமுறை 3

சிரிஞ்சை வெளியே கொண்டுவர, ப்ளிஸ்டர் பேக்கேஜிங்கின் இரு பகுதிகளையும் பிடித்து இழுங்கள், அதன்மூலம் ப்ளிஸ்டர் பள்ளம் பெரிதாகும், சிரிஞ்ச் ப்ளிஸ்டரிலிருந்து வெளியே வந்து விழும்.



## வழிமுறை 4

கைகளைக் கழுவுங்கள்.



## வழிமுறை 5

ஊசி போடப்போகும் இடத்தைத் தேர்வு செய்யுங்கள்.




ஊசி போடச் சரியான இடம், வயிற்றின் கீழ்ப் பகுதியாகும். ஃப்ராஃக்மினை தொடையின் பக்கவாட்டுப் பகுதிகளிலும் போடலாம். ஆனால் அப்போது தசைப் பகுதியில் ஊசி போடப்பட்டுவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருமுறை ஊசி போடும்போதும், வயிறு அல்லது தொடையில் சென்றமுறை ஊசி போட்ட இடத்தை விட்டுவிட்டு வேறு இடத்தைத் தேர்வு செய்யுங்கள். **படத்தில் காட்டப்பட்டுள்ளபடி.**

## வழிமுறை 6

ஊசி போடப்போகும் இடத்தைத் தூய்மைப்படுத்துங்கள்.



ஆல்கஹால் தோய்த்த பஞ்சைக் கொண்டு ஊசி போடப்போகும் இடத்தைத் தூய்மைப்படுத்துங்கள். அதனைக் காயவிடுங்கள்.

## வழிமுறை 7

சிரிஞ்சின் நடுப் பகுதியைப் பிடித்து எடுங்கள், ஃப்ராஃக்மின் டோஸை உட்செலுத்தத் தயாராகுங்கள்.



**ஊசியைப் பயன்படுத்தும்போது எப்போதும் Needle Guard Activation Clip-களைத் தொடாதீர்கள். இது ஊசியின் பாதுகாப்பு ஏற்பாட்டைத் தூண்டிவிட்டு, ஊசி போடுமுன் அதனைப் பின்னே கொண்டுவந்துவிடக்கூடும். அதன்பிறகு சிரிஞ்ச் பயன்படாது.**

## வழிமுறை 8

ஊசிக் காப்பு மூடியை நீக்குங்கள்.



ஊசிக் காப்பு மூடியை நீக்குவதற்கு வலுவாக இழுக்கவேண்டும். முழு டோஸும் செலுத்தப்படுவதற்கு, **ஊசி போடுவதற்குமுன் முன்நிரப்பப்பட்ட சிரிஞ்சில் உள்ள எந்த சிறிய காற்றுக் குமிழியையும் நீக்காதீர்கள்.**

தொடர்கிறது... →

## வழிமுறை 9

**தோலைக் கிள்ளி ஒரு மடிப்பு உருவாக்குங்கள்.**



கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டிவிரலைக் கொண்டு உருவாக்கிய ஒரு தோல் மடிப்பில்தான் ஊசி போடப்படவேண்டும். **ஊசி போட்டு முடிக்கும்வரை இந்த மடிப்பை அப்படியே பிடித்திருக்க வேண்டும்.**

## வழிமுறை 10

**ஃப்ராஃக்மினைச் உட்செலுத்துங்கள்.**



உங்களுடைய முதன்மைக் கரத்தின் கட்டை விரல் மற்றும் நடு விரல் இடையே சிரிஞ்சை ஒரு பென்சில் போலப் பிடித்துக்கொள்ளுங்கள். ஊசியை நெட்டுக்குத்தாகத் தோலுக்குள் எந்த அளவு செல்கிறதோ அந்த அளவுக்கு உட்செலுத்துங்கள். அப்படி உட்செலுத்தியபிறகு, ஊசியை நகர்த்தக்கூடாது.

**உங்களுக்கு நீங்களே ஊசி போட்டுக்கொள்ளும்போது,** ஆள்காட்டிவிரல் கொண்டு ப்ளஞ்சரை அழுத்துங்கள்; **நீங்கள் மற்றவர்களுக்கு ஊசி போடும்போது,** கட்டைவிரல் கொண்டு ப்ளஞ்சரை அழுத்துங்கள்.

## வழிமுறை 11

**ஊசியை நீக்கி ஊசிக் காப்பு மூடியைக் கொண்டு மூடுங்கள்.**



சிரிஞ்சில் உள்ள அனைத்தையும் ஊசி போட்டு முடித்தபிறகு, ஊசியை வெளியில் எடுங்கள். **அப்போது, தோல் மடிப்பை விடக்கூடாது, ப்ளஞ்சரைக் கீழே அழுத்தியபடி தோலை விடுவிக்கவும்.**

ப்ளஞ்சரை விடுங்கள். ஊசி முழுமையாகக் காக்கப்படும்வரை சிரிஞ்ச் கருவிக்குள் முழுக்கச் செல்ல விடுங்கள். **முழு டோஸும் செலுத்தப்படும்வரை ஊசிக் காப்பு ஏற்பாடு செயல்படாது.**

## வழிமுறை 12

**ஃப்ராஃக்மின் ஊசி போட்டபிறகு.**



ஊசி போட்ட இடத்தில் ஒரு பஞ்சை வைத்து 5 முதல் 10 விநாடிகளுக்கோ அதற்குமேலோ அழுத்துங்கள். காயம் ஏற்படாதிருக்க, ஊசி போட்ட இடத்தைத் தேய்க்காதீர்கள்.

பயன்படுத்திய சிரிஞ்சை உரிய இடத்தில் தூக்கி எறியுங்கள். அது குழந்தைகளுக்குக் கிடைக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

ஃப்ராஃக்மின் என்பது அறுவைச் சிகிச்சையின்போது ரத்தம் உறைதலைத் தடுக்க, ஆழமான ரத்தக் குழாய்களில் ஏற்படும் தீவிர ரத்த உறைதலைக் குணப்படுத்த, நோய்க்குறி ரத்தக் கட்டிகளைக் குணப்படுத்த, புற்றுநோய் உள்ளவர்களிடம் மீண்டும் ரத்தக் கட்டிகள் தோன்றாமல் தடுக்க, நிலையற்ற கரோனரி ஆர்டெரி (இதயத் தமனி) நோயைக் குணப்படுத்த, தீவிர நோய் காரணமாக அதிக நடமாட இயலாமல் இருப்பவர்களிடையே ரத்தம் உறைதலைத் தடுக்க மற்றும் தீவிர சிறுநீரகச் செயலின்மை அல்லது நாட்பட்ட சிறுநீரக நோயாளிகள் பயன்படுத்தும் ரத்த டயாலிசிஸ் மற்றும் வடிகட்டும் கருவிகளில் உறைதலைத் தடுக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**உங்களுடைய மருத்துவர் அல்லது செவிலியர் தரும் குறிப்புகளைப் பின்பற்றுவது அவசியம். உங்கள் மருத்துவர் சொல்லும் கால அளவு முழுவதும் குறிப்பிடப்பட்ட ஊசிகளைச் சரியாகப் போட்டுக்கொள்ளுங்கள்.**

**நீங்கள் ஃப்ராஃக்மின் பயன்படுத்தும்போது, மருத்துவர் சிபாரிசு செய்த மருந்துகளைத் தவிர வேறு எதையும் எடுத்துக்கொள்ளாதீர்கள்.** சில மருந்துகள் ஃப்ராஃக்மினின் ரத்த உறைதலுக்கு எதிரான (உதாரணமாக, ரத்தம் மெலிதல் விளைவு) செயல்பாட்டைத் தீவிரப்படுத்தக்கூடும். ஆகவே, நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் மருந்துகள் என்னென்ன என்று மருத்துவருக்குக் கண்டிப்பாகச் சொல்லவேண்டும்.

**ஃப்ராஃக்மின் தோலுக்குக் கீழே உள்ள பரப்பில் (தோலுக்கடியில்) ஊசியாகப் போடப்படுகிறது. இதனைத் தசைகளுக்குள் போடக்கூடாது.**

இந்த ஊசியைப் போடும்போது, அந்த இடத்தில் தீவிர நிறமாற்றம், வலி அல்லது காயம், காரணமில்லாத காயம் ஏற்பட்டால், மூக்கில் ரத்தம் வடிந்தால், வாய், ஈறுகள், வயிறு, குதம் அல்லது பெண்ணுறுப்பில் ரத்தம் வடிந்தால், ஊசி போட்ட இடத்தில் அல்லது அறுவைச் சிகிச்சை செய்த இடத்தில் ரத்தம் வடிந்தால், ஒவ்வாமை விளைவுகள் ஏற்பட்டால், சிறுநீரில் ரத்தம் வந்தால், பக்கவாதம் வந்தால் (மூளைக்குள் ரத்தக் கசிவு), **உடனே ஃப்ராஃக்மின் போடுவதை நிறுத்திவிட்டு உங்கள் மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும்.** ஃப்ராஃக்மின் எடுத்துக்கொள்ளும்போது எந்த எதிர்பாராத விளைவு ஏற்பட்டாலும், உங்களுடைய மருத்துவர் அல்லது மருந்தாளுநரை உடனே தொடர்புகொள்ளவும்.

உங்களுடைய முன்நிரப்பப்பட்ட சிரிஞ்சுகளை அறை வெப்பநிலையில் (15-30 டிகிரி செல்சியஸ்) வைத்திருங்கள்.

முழுமையான ஊசி போடும் விவரங்கள் மற்றும் பாதுகாப்பு விவரங்களுக்குத் தயாரிப்பின் உள்ளே உள்ள வாடிக்கையாளர் விவரக் கையேட்டைக் காணுங்கள்.

**ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சில் கிடைக்கும் பிற பயனுள்ள Fragmin வள ஆதாரங்களைக் கண்டறிவதற்கு, Fragmin.ca என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்**

**இணையத்தளத்திற்குள் நுழைவதற்கு இந்த எண்ணை உள்ளிடவும்: 02430789**

FRAGMIN ® Pfizer Health AB, owner/Pfizer Canada ULC, Licensee
© 2019 Pfizer Canada ULC, Kirkland, Quebec H9J 2M5

PP-FRA-CAN-0170-TM

MEMBER OF INNOVATIVE MEDICINES CANADA

Pr Fragmin® dalteparin sodium